பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 192

சனிக்கிழமை
07 ஜூன் 2025


வைகாசி 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056


## மாவைக்கு நாடாளுமன்றில் அனுதாபப் பிரேரணை!

கொழும்பு, ஜூன் 7
மாவை சேனாதிராஜாவின் மறைவை முன்னிட்டு நாடாளுமன்றத்தில் நேற்று அனுதாபப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது.
மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு நாடாளுமன்றத்தில் நேற்று அனுதாபப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. அவற்றில் ஒன்றாகவே, மாவை சேனாதிராஜாவுக்கான 15

# செம்மணி மயானத்துக்கு அருகாக இன்னொரு மனிதப்புதைகுழி

### செய்மதி ஒளிப்படத்தை வைத்து பேராசிரியர் சோமதேவ அதிர்ச்சி



யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தி மயானத்துக்கு அருகாக இன்னுமொரு மனிதப் புதைகுழி இருபதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன என்று துறைசார் பேராசிரியர் சோமதேவ தெரிவித்துள்ளார். 15

## சித்துப்பாத்தி குற்றப்பகுதி ஒரு மனிதப்புதைகுழியே!

### நீதிபதி அ.அ.ஆனந்தராஜா கட்டளை தொடர்ச்சியாக அகழவும் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ்ப்பாணம் செம்மணி - சித்துப்பாத்தி மயானத்தில், அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட குற்றப் பகுதியை ஒரு மனிதப் புதைகுழி என்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதிபதி அ.அ.ஆனந்த ராஜா அறிவித்துள்ளார்.
சித்துப்பாத்தி குற்றப்பகுதியை 15

## செம்மணி மனிதப் புதைகுழியை பார்வையிட விண்ணப்பிக்கலாம்!

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழியைப் பார்வையிடுவதற்கு அல்லது கண்காணிப்பதற்கு எவராவது விரும்பினால், அவர்கள் சட்டத்தரணியூடாக நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்க முடியும் என்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி அ.அ.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.
செம்மணி சித்துப்பாத்தி மயானம் தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் 15

## செம்மணிப் புதைகுழியில் இன்றுடன் அகழ்வு முடிவு

### 45 நாள்கள் காலத்தைக்கொண்ட அடுத்தகட்டப் பணி விரைவில்

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ்ப்பாணம் செம்மணிப் புதைகுழியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகள் இன்றுடன் முடிவுக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள் 15

## விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜூன் 7
மல்லாவி அனிச்சங்குளம் பகுதியில் 15

## சித்துப்பாத்தி மயானசபை உறுப்பினர்களும் பாதுகாப்புப் பணிகளுக்கு உதவவேண்டும்

### நீதிமன்றத்தில் பொலிஸார் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 7
செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுவதற்கு, சித்துப்பாத்தி மயானசபை உறுப்பினர்களும் உதவிக்கு வரவேண்டும் என்று பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.
சித்துப்பாத்தி மயானத்தில் அகழ்வுப் பணிகள் இடம்பெறும் பகுதிகளில் பொலிஸாரின் பிரசன்னம் அதிகரிக்கப்படவில்லை. 15




## பட்டா - மோ.சைக்கிள் விபத்து; குடும்பத்தலைவர் உயிரிழப்பு!



யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ்ப்பாணம் சங்கானை பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
மாதகல் மேற்கு 15

'காரைக்கால் நெருப்புக்கு காரணம் என்னெண்டு ஆரைத்தான் கேக்கிறதோ?'

## 323 கொள்கலன்களில் புலிகளின் ஆயுதங்கள்?

### தெளிவுபடுத்தவேண்டுமென பொதுஜன பெரமுன கோரிக்கை

கொழும்பு, ஜூன் 7
துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் 323 கொள்கலன்களில் விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் 15



காரைக்கால்

## கொழும்பு மாநகர் யாருக்கு

விரிவு பக்:-02

## கழிவு சேகரிக்கும் இடத்தில் நேற்றிரவு பெரும் தீவிபத்து!

யாழ்ப்பாணம், ஜூன் 7
நல்லூர் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட காரைக்கால் கழிவுசேகரிக்கும் நிலையத்தில் நேற்று இரவு பெரும் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. காற்றுடனான காலநிலை காரணமாக, தீ விரைவாகப் பரவி 15

## சேவை வழங்கமுடியாத நிலையில் யாழ். மாநகர தீயணைப்பு வாகனம்!

### கைகொடுத்தது கரைச்சி

யாழ்ப்பாணம், ஜூன் 7
காரைக்கால் பகுதியில் உள்ள குப்பைக் கிடங்கில் பரவிவரும் பெருந் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 06.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4094 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 30 35 40 53 |
| விசேட எழுத்து | C |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 06.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1161 |
| வெற்றி இலக்கங்கள் | 08 31 37 41 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 06.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0120 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 3 9 4 0 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 06.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2200 |
| ஆங்கில எழுத்து | A |
| சுப்பர் இலக்கம் | 12 |
| வெற்றி இலக்கங்கள் | 01 50 51 77 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 06.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5852 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 4 7 6 5 1 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 06.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1882 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 15 41 51 55 |
| விசேட எழுத்து | T |

# கொழும்பு மாநகரசபை யாருக்கு? பெரும் பரபரப்பில் அரசியல் களம்

கொழும்பு, ஜூன் 7

**கொழும்பு மாநகரசபையில் தமது கட்சியே ஆட்சியமைக்கும் என ஆளுந்தரப்பும், பிரதான எதிரணியும் அறிவித்து வருவதால் கொழும்பு அரசியல் களம் பெரும் பரபரப்பாகக் காணப்படுகின்றது.**

இலங்கையிலுள்ள 341 உள்ளூராட்சிசபைகளில் கொழும்பு மாநகரசபை பிரதான சபையாகக் கருதப்படுகின்றது. நடைபெற்ற தேர்தலில் அச்சபையில் ஆட்சியமைப்பதற்குரிய அறுதிப் பெரும்பான்மைப் பலத்தை எந்தவொரு கட்சியும் பெறவில்லை. ஆட்சியமைப்பதற்கு 59 ஆசனங்களைப் பெறவேண்டிய நிலையில் தேசிய மக்கள் சக்தி வசம் 48 ஆசனங்களே உள்ளன. சில கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களும் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. இந்தநிலையில் கொழும்பு மாநகரசபையில் தமது கட்சி ஆட்சியமைப்பது உறுதியென தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

கொழும்பு மாநகரசபையில் 29 இடங்களைப் பெற்றுள்ள ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி (13), ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (05), முஸ்லிம் காங்கிரஸ் (04), சர்வஜன அதிகாரம் (02) உள்ளிட்ட தரப்புகளின் ஆசியுடன் ஆட்சியமைக்க முயற்சித்துவருகின்றது. தமது அணிக்கு பெரும்பான்மைப்பலம் உள்ளது என்று கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபையின் மேயர் மற்றும் பிரதி மேயரை தெரிவுசெய்வதற்குரிய வாக்கெடுப்பு எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (எ-44)

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி | 06.06.2025 | தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0560 | | |
| ஆங்கில எழுத்து | Q | வெற்றி இலக்கம் | 8 7 3 5 6 8 |

| Super Ball DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 06.06.2025 | தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2826 | ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 02 07 27 63 | | |

| சனிதா DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 06.06.2025 | தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | X | வெற்றி இலக்கம் | 03 26 41 68 |
| வெற்றி வாரம் | 4987 | | |

| SASIRI DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 06.06.2025 | தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0698 | வெற்றி இலக்கம் | 11 35 40 |

| லக்ன ராசி DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 06.06.2025 | தினம் | வெள்ளிக்கிழமை |
| விருச்சிகம் | | வெற்றி இலக்கம் | 09 15 47 50 |
| சீட்டிழுப்பு வாரம் | 4538 | | |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 06.06.2025 | தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | L | சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கம் | 05 31 47 50 | வெற்றி வாரம் | 2002 |

| அத கோடிபதி DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 06.06.2025 | தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | E | வெற்றி இலக்கம் | 10 27 72 76 |
| வெற்றி வாரம் | 2652 | | |

## உள்ளூராட்சி சட்டத்தை அரசு மாற்றவேண்டும்!

*ஜானக வகும்புர தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 7

உள்ளூராட்சி சட்டத்தை மாற்றி புதிய சட்டம் ஒன்றை இந்த அரசு உருவாக்க வேண்டும் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜானக வகும்புர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது கொழும்பு மாநகரசபையில் அரசு ஆட்சியமைக்க முடியாமல் போனால் ஆணையாளரின் நிர்வாகத்தின்கீழ் அது கொண்டுவரப்படும் என்று அரசு சொல்கிறது. அப்படிச் செய்யமுடியாது. சட்டத்தில் அதற்கு இடமில்லை. ஒரு கட்சி 50 வீத உறுப்பினர்களைக் காட்டினால் ஆட்சி அமைக்கமுடியும்.

அரசாங்கத்துக்கு மக்கள் வாக்களிக்கவில்லை என்றால் அதற்கான காரணத்தைத் தேடவேண்டுமே தவிர வேறு வழியில் சபைகளின் ஆட்சியைப் பிடிப்பதற்கு முயற்சி செய்யக்கூடாது. சபையை ஒழுங்காக நடத்திச் செல்லவேண்டும் என்றால் பழைய தேர்தல் முறைமைதான் சிறந்தது. இப்போதுள்ள முறைமை எதிர்க்கட்சிகளுக்குச் சாதகமானது.

இந்தச் சட்டத்தை மாற்றுவதற்கு நாம் கடும் முயற்சிகளை மேற்கொண்டோம். அது பல காரணங்களால் முடியாமற்போனது. இந்த அரசாங்கம் இதை மாற்றவேண்டும். சபையைக் கொண்டு நடத்தும் வகையில் சட்டம் இருக்கவேண்டும். (எ-இ)

## கொழும்பு மாநகரசபையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி!

*அடித்துக் கூறுகின்றார் நளிந்த*

கொழும்பு, ஜூன் 7

கொழும்பு மாநகரசபையில் தேசிய மக்கள் சக்தி நிச்சயம் ஆட்சி அமைக்கும் என்று அரசாங்கம் மீண்டும் உறுதிபடத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளதாவது:-

கொழும்பை வெல்வோம் எனக் கூறி மேயர் வேட்பாளர் ஒருவரை ஐக்கிய மக்கள் சக்தி களமிறக்கியது. அந்த மேயர் வேட்பாளர் சொந்தத் தொகுதியில் தோற்றுவிட்டார். தற்போது மேயர் வேட்பாளர் யாரென்பதை அறிவிக்காமல் ஆட்சியைப் பிடிப்பார்களாம். கொழும்பு மாநகரில் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். இதற்கமைய கொழும்பில் நாம் ஆட்சியமைப்போம். கொழும்பைக் கட்டியெழுப்புவோம். கொழும்பு மாநகரிலும் நாம் ஆட்சியமைப்போம். அதுவரையில் எதிரணிகளின் நகைச்சுவைகளைப் பார்த்துக்கொண்டிருப்போம்- என்றார். (எ-44)

## நூதனமான முறையில் 9.3 மில்லியன் மோசடி



*அரசாங்க வங்கி ஒன்றின் பெண் அதிகாரிகள் கைது*

கொழும்பு, ஜூன் 7

பாணந்துறை - கெசல்வத்தைப் பகுதியில் செயற்படும் ஓர் அரசாங்க வங்கியில், குறைந்த மதிப்புள்ள தங்கப் பொருள்களை அடகுவைத்து 99 இலட்சத்து 37 ஆயிரத்து 100 ரூபாவரை மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் மூன்று பெண் அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வுத் துறையின் நிதிப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில், சந்தேகநபர்கள் அடமானப் பத்திரங்களில் போலிக் கையொப்பங்களைப் பயன்படுத்தி இந்த மோசடியில் ஈடுபட்டமை உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்கள் பொதுச் சொத்துச்சட்டத்தின்கீழ் நீதி[illegible]மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளன[illegible]. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை[illegible]களை குற்றப்புலனாய்வுத் துறையின் நிதிப் பிரி[illegible]வு முன்னெடுத்துவருகிறது. (எ-இ)

## சித்த வைத்தியத்தில் முதல் பேராசிரியர்

திருகோணமலை, ஜூன் 7



கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சித்த வைத்தியத்தில் இலங்கையின் முதல் பேராசிரியராக வைத்தியர் நா.வர்ணகுலேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மூதவை மற்றும் பேரவைக் கூட்டத்தின் முடிவின் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த முதலாவது பேராசிரியர் நியமனமானது, கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தின் சித்த மருத்துவ பீடத்துக்குக் கிடைத்த பெருமையாகும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவக் கற்கைநெறியினை உருவாக்குவதில் பேராசிரியர் நா. வர்ணகுலேந்திரன் அரும்பாடுபட்டவராவார். (ச-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொருளாதாரம், உணவுப்பாதுகாப்பு வடக்கில் மேம்படுத்த செயற்றிட்டம்!

## அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 6**

**இலங்கையில் குறிப்பாக வடக்கில் உள்ளூர்ப் பொருளாதாரத்தையும், உணவுப்பாதுகாப்பையும் மேம்படுத்தும் வகையில் செயற்றிட்டமொன்றை அவுஸ்திரேலிய அரசாங்கம் ஆரம்பித்துள்ளது என்று இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன் தெரிவித்துள்ளார்.**

கடந்தவாரம் உதயன் பணிமனைக்கு வருகைதந்து, ஆசிரியபீடத்தினரைச் சந்தித்து கலந்துரையாடியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:/

இந்தச் செயற்றிட்டம் சர்வதேச தொழில் அமைப்பு மற்றும் நோர்வே அரசாங்கத்துடனான கூட்டு முயற்சியாகும்.

இது பல ஆண்டுகளாக வெவ்வேறு திட்டங்களில் நாங்கள் அந்த இரண்டு அமைப்புகளுடன் கொண்டிருந்த கூட்டு முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டது.

இதற்கு GROW (Generating Resilient Opportunities for Work) என்று பெயர். தற்போது வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ளூர் விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பேணும்வகையில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. கிராமப்புற தட்பவெப்பநிலை எதிர்ப்புத் திறன் உள்ளடக்கிய விவசாயம் சார்ந்த வாழ்வாதாரங்களின் மூலம் கிராமப்புறப் பொருளாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், விளிம்பு நிலை சமூகங்களை தனியார்த்துறை பங்காளிகளுடன் இணைப்பதும் இந்தத் திட்டத்தின் விளைவாக இருக்கும்.

எனவே, மக்கள் தங்கள் பொருள்களைச் சந்தைக்குக் கொண்டு செல்லவும், நிலையான பெறுமதிவாய்ந்த விற்பனை வலையமைப்புகளை உருவாக்கவும் இது உதவும். இந்தத்திட்டத்தில் பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது - என்றார். (ச)

# ஹெரோய்னுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 7

ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைதானவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது. யாழ். சங்கானைப் பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருப்பதாக மானிப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைவாக 20 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

குறித்த இளைஞரை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தியபோது 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ச-125)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

குப்பிழான் வடக்கு சிவகாமி அம்பாள் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.26 மணி முதல் காலை 8.26 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை அடியவர்கள் தங்கள் கைகளால் எண்ணெய்க் காப்புச் சாத்தமுடியுமென ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-25,66)

# பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை விரைவில் மீளியக்க நடவடிக்கை!



கிளிநொச்சி,ஜூன் 7

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மீள விரைவாக இயக்குவது தொடர்பில் நிறுவனத் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையைச் சேர்ந்த உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் அந்தப் பகுதிக்கு களவிஜயம் செய்து ஆராய்ந்துள்ளனர். இதன்போது குறித்த தொழிற்சாலை நாட்டின் யுத்த நிலைமை காரணமாக 1983 ஆம் ஆண்டுக்குப் பின்பு இயங்கவில்லை. புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததைத்தொடர்ந்து விரைவாக ஆரம்பிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறித்த இரசாயன தொழிற்சாலை மூலம் குளோரின் மற்றும் காஸ்டிக் சோடா என்பன உற்பத்தி செய்யப்படவுள்ளன.

தேசிய அளவில் நீர் சுத்திகரிப்புக்கு குளோரின் இறக்குமதிசெய்யப்படுகின்றது. இங்கு உற்பத்திசெய்வதன் மூலம் இறக்குமதியை நிறுத்த முடியும் என்று குறித்த நிறுவனத் தலைவர் தெரிவித்தார். (ச-113)

# சோதனைக்கு வரும் 10 மாணவர்களில் 7 பேர் போதைக்கு அடிமை

யாழ்ப்பாணம்,ஜூன் 7

மாணவர்களிடையே உயிர்கொல்லி போதைமாத்திரையின் பயன்பாடு அதிகரித்துள்ளது. சந்தேகத்தில் அழைத்து வரப்படும் 10 மாணவர்களில் 7 பேருக்கு உயிர்கொல்லி போதைமாத்திரை பயன்படுத்தியமைக்கான பெறுபேறு கிடைக்கப்பெறுகின்றது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி செ.பிரணவன் தெரிவித்துள்ளார்.

உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வளிக்கும் நிலையத்தை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் வடக்கு ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார். (ச-66)

## சுகாதாரம் பேணாமை

# உணவக உரிமையாளருக்கு 5 வருட ஒத்திவைத்த சிறை!

மன்னார், ஜூன் 7

மன்னாரில் உள்ள பிரபல உணவகம் ஒன்றின் முகாமையாளர் மற்றும் ஊழியர் ஒருவருக்கு ஐந்து வருடம் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் குறித்த இருவரும் பணியாற்றிய உணவகத்துக்கு 83 ஆயிரம் ஆயிரம் ரூபா தண்டப்பணமும் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தால் நேற்றுமுன்தினம் விதிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் மன்னார் மாவட்டத்தில் சாவற்கட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது குறித்த உணவகத்தில் உணவுகளை ஒழுங்கற்ற முறையில் களஞ்சியப்படுத்தியமை, கழிவுநீர்த் தொட்டியை உரிய முறையில் பேணாமை, சுத்தம் பேணப்படாமை உள்ளிட்டவை கண்டறியப்பட்டது. அதனையடுத்து குறித்த உணவகத்துக்கு எதிராக ஒன்பது குற்றச்சாட்டுகளின்கீழ் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது. (ச-56)

# பொன். சிவகுமாரனுக்கு யாழ்.பல்கலையில் அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஜூன் 7

தமிழினத்தின் விடுதலைக்கான முதல் தற்கொடையாளர் தியாகி பொன்னுத்துரை சிவகுமாரனின் 51ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இதன்போது பொன். சிவகுமாரனின் திருவுருவப் படத்துக்கு மாணவர்கள் மலர்மாலை அணிவித்து மலரஞ்சலிசெலுத்தினர்.



பொன்.சிவகுமாரன் தமிழ் மாணவர்களுக்கு தரப்படுத்தல் மூலம் திணிக்கப்பட்ட ஒடுக்குமுறைக்கு எதிராகவும், தமிழர்களின் உரிமைகளை மீட்பதற்காகவும் கிளர்ந்தெழுந்து ஆயுதம் ஏந்திப் போராடினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 26.03.1944

மறைவு 06.06.2025



## முருகேசம்பிள்ளை மனோன்மணி
சின்னத்தங்கச்சி

கல்லைவேம்படி சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசம்பிள்ளை மனோன்மணி (சின்னத்தங்கச்சி) அவர்கள் (06.06.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு (பிரபல வர்த்தகர்) அன்னமுத்து அவர்களின் புத்திரியும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் வேதவனம் தம்பதியின் மருமகளும் காலஞ்சென்ற முருகோசம்பிள்ளை (முன்னாள் அதிபர் ய/சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாலயம்), அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகேஸ்வரி, தங்கமுத்து மற்றும் கந்தவனம் ஆகியோரின் அன்பு சகோதரியும், சாந்தினி (பிரான்ஸ்), மாலினி, மனோகரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கருணாகரன் (காந்தன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ராதாக்கிருஸ்ணன் , சிறீதரன், தீபா, ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருஷாந், சிறீராம், சிவானுஜா, அர்வின், ஆதீஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், இவர் இளங்கேயனின் (ஜேர்மன்) சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (08.06.2025) ஞயிற்றுக்கிழமை நாளை காலை 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்:
குடும்பத்தினர்.
077 935 3193
003310664836725

கல்லை வேம்படி
சுழிபுரம்

# மரண அறிவித்தல்

மண்ணில் 15.11.1951

விண்ணில் 04.06.2025



## பூதத்தம்பி வரதராஜா (வரதண்ணை)

யாழ் கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கு கல்வியங்காடு விளையாட்டரங்க வீதியை வதிவிடமாகவும் கொண்ட பூதத்தம்பி வரதராஜா (வரதண்ணை) அவர்கள் கடந்த (04.06.2025) புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதத்தம்பி - பவளம் தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற நாகநாதர் - கனகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஜெகதீஸ்வரியின் (கிளி) அன்புக் கணவரும், சஜீபன் (உத்தியோகத்தர் - ஆளுநர் செயலகம் - வடமாகாணம்), ஆஷா (லண்டன்), அனுஷா (கனடா), வோஷிகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜீவாணி, ரமேஸ் (லண்டன்), றோகர் (கனடா), பிரபவன் (ஞானம்ஸ் பெயின்ற்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கனகமணியின் அன்புச் சகோதரரும், சகஷ்யா, சஷ்வின், விஷ்வின், பிரதீஸ், மோனிஸ், ஹறிஸ், சர்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 249 7165


விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு,
கல்வியங்காடு.

(CR/45299) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 16.11.1939

மறைவு 06.06.2025



## நாகராசா செல்வராசா
( முன்னாள் விற்பனை முகாமையாளர்- மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவு சங்கம் , சமாதான நீதவான் )

ஆலங்குளாய் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா செல்வராசா அவர்கள் (06.06.2025) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், தில்லைமலர் அவர்களின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் - சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மருமகனும் சசிகரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - ஶ்ரீலங்கா ரெலிகொம் யாழ்ப்பாணம்), சசிகலா (வைத்தியர் - போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்), பிறேமினி (கிராம உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜபரணி, சசிகேஷ் (விரிவுரையாளர்- பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்), தயாதரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் உடுவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹவிஷா, திஷானன், தஷ்விகா, பிரவீன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 08.30 மணிய்ளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


T.P 021 205 2888
021 224 0462

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 15.02.1942

மறைவு 05.06.2025



## கணபதி பழனிப்பிள்னை

இருபாலை கிழக்கு கேணிக்குளம் வீதியை வசிப்பிடமாக கொண்ட கணபதி பழனிப்பிள்ளை நேற்று முன்தினம் (05.06.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தங்கம் அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம், கற்பகம், சிதம்பரம், அரியநாயகம், பூபதிதாசன், சிவசோதி மற்றும் காசிநாதன், ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வல்லிபுரம் அவர்களின் பாசமிகு மைத்துனரும் செந்தில்குமரன், தயாளினி, செந்தில்நாதன், கிருபாளினி, செந்தில்ரூபன், செந்தில்லபன், ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சுமதி, இராஜரட்ணம், காயத்திரி, தயாபரன், றஜீவி, டிலக்ஷி, ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (09.06.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக 10 மணியளவில் இருபாலை நொச்சிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 175 8457

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. பிரான் தனது AIA உடனான தொழில் வாழ்க்கையின் 15 வது ஆண்டு நிறைவை தனது வாடிக்கையாளர்களுடன் கொண்டாடினார்.








ஆயுட்காப்புறுதி துறையில் AIA பல்தேசிய நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி Court of the table மற்றும்Top of the table உள்ளடங்கலாக MDRT - Million Dollar Round Table (USA) அங்கத்துவத்தை தொடர்ச்சியாக 10 வருடங்கள் வெற்றி கொண்டு MDRT சர்வதேச அமைப்பின் ஆயுட்கால அங்கத்தவராக திகழ்வதோடு IQA- International Quality Award, IAP-International Award for Productivity போன்றவற்றையும் தொடர்ச்சியாக வென்று வருகிறார் இவர் கடந்த 11.05.2025 அன்று தனது தொழில் வாழ்க்கையின் 15 வது ஆண்டு நிறைவை தனது வாடிக்கையாளர்களுடன் கிளிநொச்சியில் வெகு விமர்சையாக கொண்டாடினார்.

அவர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமாக 600 இற்கு அண்மித்த வாடிக்கையாளர்களை தன்னகத்தே கொண்டுள்ளதுடன் மேற்படி நிகழ்வில் 200 இற்கு மேற்பட்ட வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது அவர்களுக்கு பல்வேறு வகைகளின் அடிப்படையில் கௌரவமும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது. மேலும் வருமான வரி தொடர்பான கருத்தரங்கும், இராப்போசனமும் இடம்பெற்றது.







## தேசிய மருந்து உற்பத்தியாளருக்கு பாதிப்பு ஏற்படாதவாறு இறக்குமதி

### அமைச்சர நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 7

மருந்து இறக்குமதியால் தேசிய மருந்து உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவர் என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. மருந்துக் கொள்வனவுக்குத் தூதரக மட்டத்தில் ஆரம்பகட்டப் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், மருந்துத் தட்டுப்பாடு தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அரசாங்கங்களுக்கு இடையிலான கொள்கைத் திட்டத்தின்கீழ் மருந்துக் கொள்வனவுக்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்திலான மருந்து உற்பத்திக்குப் பாதிப்பு ஏற்படாதவகையில் மருந்து இறக்குமதி செய்யப்படும். பகிரங்க விலைமனுக்கோரல்கள் ஊடாகவே மருந்துகள் கொள்வனவு செய்யப்படும்.

அதற்காக நிதியமைச்சு, சுகாதார அமைச்சு, கைத்தொழில் அமைச்சு, வர்த்தகத்துறை அமைச்சு மற்றும் வெளிவிவகாரத்துறை அமைச்சு ஆகிய அமைச்சுகளை உள்ளடக்கி விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகளும் அடங்குவர் - என்றார். (எ-இ)

## கொழும்பு மேயர் வேட்பாளர் ஐ.ம.ச. இணக்கப்பாடில்லை!



### ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 7

கொழும்பு மாநகரசபை மேயர் வேட்பாளர் தொடர்பில் தம்முடன் ஐக்கிய மக்கள் சக்தி இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். அந்தக் கட்சியால் முன்மொழியப்படும் நபர் எம்மால் ஏற்றுக்கொள்ளக்கூடியவராகவும் இருக்கவேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைப்பது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் எம்முடன் இன்னும் பேச்சு நடத்தவில்லை. சந்திப்புக்கு திகதி கோரியுள்ளோம். இந்த வாரத்துக்குள் பேச்சு நடத்தப்படும் என நம்புகின்றோம். கொழும்பு மாநகரசபையில் எதிரணிகள் இணைந்து ஆட்சியமைப்பது தொடர்பில் இன்னும் இணக்கப்பாடு ஏற்படவில்லை என்றே தெரிகின்றது-என்றார். (எ-44)

## பாதாளக் குழுக்களுடன் அரசாங்கமே தொடர்பு!

### சாடுகின்றார் தயாசிறி

கொழும்பு, ஜூன் 7

தற்போதைய அரசாங்கத்துக்குப் பாதாளக் குழுக்களுடன் அதிக தொடர்பு உண்டு என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இப்போது 161 சபைகளில் ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது. அவற்றுள் 151 சபைகளில் மாத்திரமே அரசாங்கத்தால் தனித்து ஆட்சி அமைக்க முடிந்துள்ளது. மீதமாக 178 சபைகள் உள்ளன. எதிர்க்கட்சிகள் ஒன்றுசேர்ந்து கட்சி சார்பற்ற அரசை இந்த சபைகளில் அமைக்கவேண்டும் என்று நான் ஆலோசனை தெரிவித்துள்ளேன்.

அரசாங்கம் இந்தச் சபைகளில் ஆட்சி அமைப்பதற்காக அதன் கொள்கையில் இருந்து விலகிச் செயற்படுகிறது. ஏனைய கட்சி உறுப்பினர்களுக்கு பணம் கொடுத்து அவர்களின் ஆதரவைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துவருகிறது. எனது தொகுதியில் உள்ள உறுப்பினர்களைச் சந்தித்து தவிசாளர் பதவி கூடத் தருவதாக அரச அமைச்சர் ஒருவர் வாக்குறுதி வழங்கியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களைக்கூடச் சந்தித்து ஆதரவு கோரியுள்ளனர்.

எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பலர் பாதாளக் குழுக்களுடன் தொடர்பு என்று அரசு கூறுகிறது. அந்த எம்.பி.க்கள் யார்? எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று கூற வேண்டும் என்று நான் நாடாளுமன்றில் அரசிடம் கோரிக்கை விடுத்தேன். உண்மையில் எதிர்க்கட்சிகளை விடவும் அரசுக்குத்தான் பாதாளக் குழுக்களுடன் அதிக தொடர்புண்டு- என்றார். (எ-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் குடும்ப விஷயமாக உங்கள் யோசனையைக் கேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். இளைய சகோதரர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

**இடபம்:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன்வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை.

**மிதுனம்:** கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். தாய் மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். வியாபாரத்தில் இலாபம் அதிகரித்தாலும், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** தேவையான பணம் இருந்தாலும் திடீர் செலவுகளும் ஏற்பட்டு கையிருப்பைக் குறைக்கும். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கிடைக்கும். ஒரு சிலருக்கு வாழ்க்கைத்துணைவழியில் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டா கும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அந்நியர்கள் தலையிடுவதை அனுமதிக்க வேண்டாம்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். உறவினர்கள் வகையில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். இளைய சகோதரர்களால் உதவியும் உற்சாகமும் உண்டு. மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வகையில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையால் ஆதாயம் உண்டாகும்.

**விருச்சிகம் :** தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை. வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. உறவினர்களால் சில குழப்பங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** பிள்ளைகளின் பணிகளில் அவர்களுக்கு உதவி செய்வீர் கள். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் ஏற்பட்ட அவப்பெயர் நீங்கும். நண்பர்களைத் தொடர்பு கொண்டு பேசுவீர்கள்.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். வாழ்க்கைத் துணையால் ஆதாயம் கிடைக்கும்.

**கும்பம்:** காரியங்கள் இழுபறியானாலும் முடிந்துவிடும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண் விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

# சுன்னாகத்தை செதுக்கிய சிற்பி செனட்டர் நாகலிங்கம்

*(சுன்னாகம் பட்டின சபையின் தலைவராக இருந்து சுன்னாகம் நகரத்தை உருவாக்கிய பெருந்தகையான அமரர் செனட்டர் நாகலிங்கத்தின் அளப்பரிய சேவையை நினைவுகூர்ந்து கௌரவிக்கும் வகையில், சுன்னாகத்தின் அன்பர்கள் ஒன்றுசேர்ந்து அவருக்கு ஒரு திருவுருவச் சிலையை நிறுவியுள்ளனர். அச்சிலையின் திறப்புவிழா வலிகாமம் தெற்குப் பிரதேச சபை வளாகத்தில் இன்று (சனிக்கிழமை) நடைபெறவுள்ளது. அதையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.)*

■ **சு.ஸ்ரீகுமரன்**



14.01.1903 அன்று தெல்லிப்பழையில் பிறந்த நாகலிங்கம், புகழ்பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வியைக் கற்றார். தொடர்ந்து இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டக் கல்வியை முடித்து சட்டத்தரணியாகப் பணியாற்றினார். யாழ்ப்பாணம், மல்லாகம் நீதிமன்றங்களில் சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளில் தோன்றி சிறப்பான வாதம் புரிந்து புகழ்பெற்ற சட்டத்தரணியாக விளங்கினார். 1924 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸில் நிறுவன உறுப்பினராக இணைந்ததுடன், இணைச் செயலாளராகவும் பணியாற்றினார். யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸினால் முன்னெடுக்கப்பட்ட அரசியல் போராட்டங்களிலும், சமூகநீதிப் போராட்டங்களிலும் பங்குபற்றினார். தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, சமபந்தி போசனம், ஆலயப் பிரவேசம் போன்ற செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டார்.

யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் செயற்பாடுகள் செயலிழந்ததையடுத்து, சமசமாஜக் கட்சியுடன் தன்னை இணைத்துக்கொண்டு ஓர் இடதுசாரியாகச் செயற்பட்டார். ஒரு தொழிற்சங்கவாதியாகத் திகழ்ந்த இவர் சிறந்த தொடர்பாடல் திறனைக் கொண்டிருந்தார். இடதுசாரி அரசியற் தலைவர்களான கொல்வின் ஆர். டி. சில்வா, லெஸ்லி குணவர்தன, என்.எம். பெரேரா போன்றோருடன் நெருக்கமான உறவைப் பேணினார். இலங்கைத் தொழிலாளர் சங்கம், இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம், வடமாகாண பஸ் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் தலைவராக இருந்து தொழிலாளர் நலன் காக்கும் பணிகளிலும் ஈடுபட்டார்.

தொழிலாளர் பிரதிநிதியாக செனட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், 1951 முதல் 1958 வரை செனட்டராகப் பதவிவகித்தார். செனட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தொழிற்சங்கவாதி இவரே என்பது குறிப்பிடத்தக்கது. உள்ளூராட்சி மன்ற எல்லை மறுசீரமைப்பின்கீழ் உடுவில் கிராமசபையிலிருந்து சுன்னாகம் பட்டினசபை பிரிக்கப்பட்டு, 1964 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து செயற்பட்டது. சுன்னாகம் பட்டினசபையின் முதல் தலைவராக செனட்டர் நாகலிங்கம் பொறுப்பை ஏற்றார். அதுமுதல் அவர் பல்வேறு வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டார். சுன்னாகம் பட்டினசபை அலுவலகம் ஒரு தனியார் வீட்டில் இயங்கி வந்தது. அதனை நகர மத்திய சபைக்குச் சொந்தமான இருநிலைக் கட்டிடத்துக்கு மாற்றியமைத்த பெருமை இவரையே சாரும். தனது நண்பரான கலாநிதி என்.எம். பெரேரா நிதி அமைச்சராக இருந்த காலத்தில், நிதி ஒதுக்கீட்டில் 15 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கீழ்த்தளத்தில் கடைகளும் மேல்தளத்தில் அலுவலகமும் கொண்ட கட்டடம் கட்டப்பட்டது. இவ்வாறே அரசியற் தலைவர்களுடனான தனது உறவை சபையின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்திக்கொண்டார். வெளிநாட்டுத் தூதரகங்களுடனும் நல்லுறவைப் பேணினார்.

சுன்னாகம் சந்தை குத்தகைதாரர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதனை பட்டினசபை நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வந்து, விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நன்மை பயக்கச் செய்தார். இதன்மூலம் 30 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்ததோடு, சுன்னாகம் பட்டின சபை அதிக வருவாய் ஈட்டும் சபைகளில் ஒன்றாக உயர்ந்தது. தனியார் வீடொன்றில் இயங்கிவந்த சுன்னாகம் பொதுநூலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டி அதில் இயங்கச் செய்ததும் இவரது காலத்தில்தான். மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு வழிகோலும் நிலையமாக சுன்னாகம் பொதுநூலகம் இன்றளவும் நிலைத்து நிற்கிறது. மேலும், அக்காலத்தில் நூலகத்தில் படிப்பு வட்டம் ஒன்றும் சிறப்பாகச் செயற்பட்டது. ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் புகழ்பெற்ற முன்னாள் அதிபர் ஒரேற்றர் சுப்பிரமணியம், "வைசர்" என அழைக்கப்படும் அதிபர் சிவசுப்பிரமணியம், தொழிற்சங்கவாதி இராசசிங்கம் முதலானோர் இவ்வட்டத்தை வெற்றிகரமாக நடத்தினர். பல அறிஞர்களை அழைத்து விரிவுரைகள் நடத்தி அறிவு வளர்ச்சிக்கு வழிவகுத்தனர்.

இவரது காலத்தில் சுன்னாகம் சந்தியிலிருந்து சுன்னாகம் பொதுநூலகம் வரையிலான கே.கே.எஸ். வீதி கொங்கிறீட் வீதியாக மாற்றப்பட்டது. மேலும் பல வீதிகளைப் புதுப்பித்தலிலும், தெருவிளக்குகள் அமைப்பிலும் இவர் முனைப்பாகச் செயற்பட்டார். சுன்னாகம் பட்டின சபைக்குத் தூய்மைப் பணியாளர்களை நியமித்து, நகரத்தைச் சுத்தமாகவும் அழகாகவும் பேணினார். சாலை வரி வசூலிப்பாளர்களை நியமித்து வருவாய் அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தார். இவ்வாறு தனது அறிவாற்றலாலும் தலைமைத்துவத்தாலும் சுன்னாகம் பட்டினத்தைச் சீரமைத்த செனட்டர் பொ. நாகலிங்கத்துக்கு, அவ்வூர் மக்கள் ஒன்றிணைந்து சிலை அமைப்பது அவரது சேவையையும் அர்ப்பணிப்பையும் நன்றியுடன் நினைவுகூரும் சிறந்த முயற்சி யாகும்.

# புதிய நிர்வாகம் தெரிவு

கொடிகாமம், ஜூன் 7

நாவற்குழி மேற்கு இளைஞர் கழகத்தின் புதிய நிர்வாகத்தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை நாவற்குழி மேற்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் தென்மராட்சி இளைஞர் சம்மேளனத் [illegible] தலைமையில் இடம்பெற்றது. தலைவராக டே. அஜித், செயலாளராக அ.மினோளி, பொருளாளராக மே.ஜோனன், உபதலைவராக கு.டுவாரகா, உப செயலாளராக யெ.ஆன்சலஸ், அமைப்பாளராக நெ.டெல்சன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

(ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# போதைக்கு எதிரான போர்!

இலங்கைக்குள் போதைப்பொருள் ஊடுருவல் மற்றும் சட்டவிரோத குடியேற்றங்களைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் அவுஸ்திரேலிய அரசாங்கம் மிகுந்த ஈடுபாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றது. அவுஸ்திரேலியாவின் துணைப் பிரதமரும், பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சர்ட் மார்லஸ் இரு தினங்களுக்கு முன்னர் இலங்கைக்கு மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின்போது, இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான கடற்பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலான நகர்வுகளைக் கனகச்சிதமாக மேற்கொண்டிருக்கின்றார். உலகின் மிகப்பெரிய தீவு நாடான அவுஸ்திரேலியா, சட்டவிரோதக் குடியேற்றத்துக்கு எதிராகவும், போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராகவும் கொள்கையளவில் மிகக்கடுமையான தீர்மானங்கள் பலவற்றை எடுத்து, அவற்றை இறுக்கமாக நடைமுறைப்படுத்தியும் வருகின்றது. தனது நாட்டுக்குள் எந்தெந்த நாடுகளில் இருந்தெல்லாம் சட்டவிரோதக் குடியேறிகள் வருகின்றார்களோ, எந்தெந்த நாடுகளில் இருந்து போதைப்பொருள் கடத்தப்படுகின்றதோ அந்தந்த நாடுகளிலேயே மில்லியன் டொலர் செலவில் சிறப்புச் செயற்றிட்டங்கள் பலவற்றை அவுஸ்திரேலியா நடைமுறைப்படுத்திவருகின்ற பின்னணியில்தான் அவுஸ்திரேலிய துணைப்பிரதமரால் இத்தகைய நடவடிக்கைகள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.


உலகளாவியரீதியில் இடம்பெறும் போதைப்பொருள் கடத்தல்களில் 80 சதவீதத்துக்கும் அதிகமானவை கடல் வழியாகத்தான் இடம்பெறுகின்றன. இதனால்தான் நாலாபக்கமும் கடல்சூழ்ந்த தீவு நாடுகள் அல்லது தமது எல்லையைக் கடலெல்லையாகக் கொண்டிருக்கும் நாடுகள் போதைப்பொருள் தாக்கத்துக்கு அதிகம் இரையாகின்றன. இற்றைக்கு மூன்று தசாப்தங்களுக்கு முன்னரும் இந்தப் போதைப்பொருள் கடத்தல்கள் இருந்தனதான். ஹெரோய்ன், கொக்கெய்ன் உள்ளிட்ட அதிஅபாயகரமான போதைப்பொருள்கள் கடத்தப்பட்டனதான். ஆனால், அன்று அவை பசுபிக் சமுத்திரத்தை மையமாகக்கொண்டியங்கின. பசுபிக் சமுத்திரத்துக்கு அடுத்தபடியாக அட்லாண்டிக் கடற்பரப்பு போதைப்பொருள் கடத்தலின் கேந்திரமாக இருந்தது. இந்தச் சமுத்திரங்களை தம் எல்லைகளாகக் கொண்டிருக்கும் பிரேஸில், பெரு, சிலி, மெக்சிக்கோ, உருகுவே போன்ற தென்னமெரிக்க நாடுகளும், நைஜீரியா, செனகல், கானா போன்ற ஆபிரிக்க நாடுகளும் போதையின் தாக்கத்தில் நின்று உழன்றன. ஆனால், தற்போது இந்தக் கடத்தல்கள் கைமீறிவிட்டன. கடத்தல் எல்லைகள் பல்லாயிரம் கடல்மைல்களாக விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன.

பசுபிக், அட்லாண்டிக் கடற்பரப்புகளை மிஞ்சுகின்ற வகையில் இன்று இந்துமா சமுத்திரத்துக்குள் போதை ஆழ ஊடுருவிவிட்டது. இலங்கை, அவுஸ்திரேலியா, மடகஸ்கார் இவற்றுக்கு இடைப்பட்ட முக்கோண வலயம்தான் இன்றைய திகதியில் போதையின் சுவர்க்கபுரி. இந்த முக்கோண வலயம் தீவிரமானதும், தொடர்ச்சியானதுமான கண்காணிப்புக்குள் உட்படுவது அவசியம். எந்தவொரு நாடு பொருளாதாரத்தில் வீழ்ந்துள்ளதோ அந்த நாடு போதைப்பொருள் கடத்தல் மாபியாக்கள் எனும் பிணம்தின்னிக் கழுகுகளுக்கு இலகுவில் இரையாகும். இலங்கையின் பொருளாதார இயலுமையும் தற்போது இரையாகக்கூடிய நிலையிலேயே உள்ளது. இவையெல்லாவற்றையும் ஒரு நேர்கோட்டில் வைத்துப்பார்த்தால் அவுஸ்திரேலியாவுடன் இலங்கை இறுக்கமாகச் செயற்பட வேண்டியதன் தாற்பரியம் பட்டவர்த்தமாகும். சோமாலியா, சூடான், எத்தியோப்பியா, கென்யா, தன்சானியா, மடகஸ்கார் ஆகிய நாடுகளை முற்றுமுழுதாகவும் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளை பகுதியளவிலுமாகக்கொண்டு மிகவேகம் பெற்றுவரும் இந்துமா சமுத்திரத்தின் போதைக்கடத்தல்களை, பொருண்மிய வல்லரசான அவுஸ்திரேலியாவின் தலைமையில் பொதுப் பொறிமுறை ஒன்றின் கீழ் அணுகுவதும், முறியடிப்பதும்தான் இந்துமா சமுத்திரத்தின் எதிர்காலமாகும். இலங்கையினதும்கூட.

## நாளொரு நல்வார்த்தை

சட்டமும் விதிமுறைகளும்
மக்களுக்காக ஏற்பட்டவை
அவற்றுக்காக மக்கள் இல்லை

– காமராஜர் –




# மன்னார் சதோச புதைகுழி; எதிர்வரும் 12 அன்று வழக்கு



மன்னார், ஜூன் 7

**மன்னார் சதோச மனிதப் புதைகுழி தொடர்பில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பாக மன்றில் முன்னிலையான சட்டத்தரணி வி.எஸ். நிறைஞ்சன் தெரிவித்துள்ளார்.**

மன்னார் சதோச மனிதப் புதைகுழி வழக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மன்னார் நீதிமன்ற நீதவான் மற்றும் அழைக்கப்பட்ட நிறுவனத்தினரும் சதோச மனிதப் புதைகுழிப் பகுதியை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். அதன்பின்னர் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. புதைகுழி அடையாளம் காணப்பட்ட பிரதேசத்தைச் சுத்தப்படுத்துவது என்றும், நகரசபை இணங்கியதன் அடிப்படையில் நிரம்பியுள்ள நீரை அகற்றுவது என்றும், புதைகுழியை பகுதி அளவில் மூடுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. அங்கிருந்து எடுக்கப்பட்ட மண் சதோச நிறுவனத்திடம் உள்ளதா? அது எங்கே இருக்கிறது போன்ற விடயங்களை பொலிஸார் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த வழக்கு மீண்டும் எதிர்வரும் 12ஆம் திகதி மேலதிக நடவடிக்கைக்காக அழைக்கப்படவுள்ளது- என்றார். (எ-56)

# மாவாப் பாக்குடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 7

ஆனைகோட்டைப் பகுதியில் மாவாப் பாக்குடன் இளைஞர் ஒருவர் மானிப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். 26 வயதான இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். அவரிடமிருந்து 15 மில்லிகிராம் மாவாப் பாக்கு கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

# நிதி மோசடி சீனப்பெண் கைது

கொழும்பு, ஜூன் 7

நிதிமோசடி தொடர்பான இரண்டு முறைப்பாடுகள் தொடர்பில் சீனப்பெண் கொழும்பு மோசடி புலனாய்வுப் பணியகத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுலா விசாக்கள் வழங்குவதாகக்கூறி 1.5 மில்லியன் ரூபாவையும் அமெரிக்க டொலரை வழங்குவதாகக் கூறி 1.916 மில்லியன் ரூபாவையும் குறித்த பெண் மோசடிசெய்துள்ளார் எனக்கூறப்படுகின்றது.

சந்தேகநபரான பெண்ணை கோட்டை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய போது எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-இ)


# மூன்று மாதங்களில் 98 சுற்றிவளைப்புகள்

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்ப்பாண மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபை கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை 98 வியாபார நிலையங்களில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இதன்போது 8 வியாபார நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சுற்றாடல் நியமங்களை மீறியமைக்காக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்குகள் தற்போது நீதிமன்றங்களில் நடைபெற்றுவருகின்றன.

சுற்றிவளைப்பு சோதனை நடவடிக்கைக்காகச் செலவு செய்யப்பட்ட எரிபொருள் தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரப்பட்டபோதும், மத்திய சுற்றாடல் அதிகாரசபை அந்தத் தகவல்களை வழங்கவில்லை. (எ-125)






# பிரதமருக்கு நினைவுப்பரிசில்

கொழும்பு, ஜூன் 7

"இலங்கை கல்வி கருத்தரங்கு 2025" எனும் தொனிப்பொருளில் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஆண்ட்ரூ பட்ரிக், இலங்கையின் பிரதமர் காலாநிதி ஹரிணி அமரசூரிய, கல்வியியலாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுடன் இணைந்து இலங்கையின் எதிர்காலக் கல்வி குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.

நிகழ்வில் இலங்கையில் பிரிட்டிஷ் கவுன்சிலின் 75 ஆண்டு கால இருப்பைக் குறிக்கும் வகையில், பிரதமருக்கு ஒரு நினைவு விருதை இலங்கை பிரிட்டிஷ் கவுன்சில் வழங்கி வைத்தது. (33-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணப் பிரதேச செயலக நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற சதுரங்க சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில் மற்றும் நினைவுச்சின்னம் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச)



கொடிகாமம் துர்க்கா மழலைகள் கல்விப் பூங்கா முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு அண்மையில் துர்க்கா மழலைகள் முன்பள்ளியின் மைதானத்தில் இடம்பெற்றது. (ச-41-159)



நல்லூர் சங்கிலியன் மன்ற சனசமூக நிலையத்தின் 80 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு விளையாட்டுவிழா அண்மையில் நடைபெற்றது. (ச-25)



# மரக்கன்றுகள் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 7

மே 18ஆம் திகதி உயிர்நீத்த வீரர்களை நினைவுகூர்ந்து கடற்படையின் கட்டளை அதிகாரி எஸ்.எல்.என்.எஸ். வேலுசுமனவின் வழிகாட்டலில் மரம் நடும் நிகழ்வு மண்டைதீவில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வின் ஒரு பகுதியாக, சி.ஓ.பி. சம்பகுளத்தில் முந்திரிச்செடிகள் மற்றும் தென்னங்கன்றுகள் நடப்பட்டன. நிகழ்வில் உள்ளூர்ப் பிரதிநிதிகள் மற்றும் கடற்படை வீரர்கள் பங்குபற்றினர். (ச-41-27-23)



யாழ். மாநகரசபையின் பிள்ளைக்கனியமுதம் முன்பள்ளியில் சிறுவர் சந்தை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ச-25, 9)



கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தின் உதவித்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட போராளிகள் மற்றும் மாவீரர் குடும்ப உறுப்பினர்களுக்கு உலருணவுப்பொதிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தின் மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றது. (ச-41)




சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஞானச்சுடர் சஞ்சிகையின்329 ஆவது வைகாசி மாத இதழ் வெளியீட்டு நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச-41-66)



இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா அண்மையில் ஆயிரக் கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் இடம்பெற்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 59 வது பிறந்த நாளும் 1ம் ஆண்டு நினைவு தினமும்



சின்னத்தம்பி
ஜெயரூபன்
(பிரதி அதிபர்-
யா/ வீமன்காமம்
மகா வித்தியாலயம்)

முத்தைத் தேடிநீர்கள் - அன்று
முத்துக் கிடைத்தும் இன்று
அள்ளிக் கொள்ள ஆளில்லையே..

மனைவி, மகள், மருமகன், பேரன்.

(CS/58491) J-1

## 31ம் நாள் அந்தியேட்டி அழைப்பு

தோற்றம் 26 . 04 . 1963



மறைவு 08 . 05 . 2025

கடந்த 08.05.2025 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தலைவர்

### அமரர் அப்பாப்பிள்ளை சிறிக்குமார்

அவர்களின்


வீட்டுக்கிரியைகள் இன்று (07.06.2025) சனிக் கிழமை காலை 07.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து **"ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபத்தில்" (ஹம்சியா மஹால்)** (37, சேர் பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்) பகல் 12.00 மணியிலிருந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

25 காரைக்காட்டு லேன்,
வண்ணார் பண்ணை,
நாச்சிமார் கோவிலடி
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

(CS 58431) E-1

## 31ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு : 04.11.1942 உதிர்வு : 08.05.2025

கடந்த 08.05.2025 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

### சுப்பையா சரவணமுத்து

(ஓய்வு பெற்ற சிரேஸ்ட வருமான வரி உத்தியோகத்தர் உள்நாட்டு இறைவரித் திணைக்களம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 05.06.2025 வியாழக்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று 07.06.2025 முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

"நீலகிரி"
கல்வயல்
சாவகச்சேரி

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

மலர்வு 24 . 08 . 1941



மறைவு 06 . 06 . 2025

### தவநாதன் முத்துப்பிள்ளை (யோகம்மா)

(ஓய்வுபெற்ற கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்)

குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும், சபாபதி வீதி, தலையாளி கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவநாதன் முத்துப்பிள்ளை (யோகம்மா) அவர்கள் நேற்று (06.06.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - தெய்வானை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தவநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும், சிவசக்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய அமைச்சு, வடக்கு மாகாணம்) அவர்களின் அன்புத்தாயாரும், திரு ஜெயகாந்தன் அவர்களின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, அன்னம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற பீதாம்பரம் (பற்குணம்) அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2025) மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பு:
077 045 3716
ஜெயகாந்தன் (மருமகன்)

தகவல் :
குடும்பத்தினர்

(CS 58489) E-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி
## அமுதசுரபி அன்னதான சபை

பதிவு இல. S236 (வரையறுக்கப்பட்டது) ஆரம்பம்-1960



**அமுதசுரபி அம்பிகை**
'அமரனுக்கு அமுதளித்த ஆதிநாயகி
அன்பர்களுக்கு உணவளிக்கும்
அன்னபூரணி'

### விசேட அறிவித்தல்

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளினால் 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுத சுரபி அன்னதான சபை "அமுதசுரபி" என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் கண்ணே ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான அடியார் களுக்குச் சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினைச் செய்து வருகின்றது. இவ் வாண்டுடன் 66 ஆவது ஆண்டில் பிர வேசிக்கின்றோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத் தொண்டு சிறந்த சேவையெனக் கருதி தருமசீலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம், பொருள், உதவி செய்து வருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வரு கின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச்சேவையைச் சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர்களுக்கும், அமுதசுரபி மண்டபத்துக்கு வந்து பணி செய்யும் அடியார்களுக்கும், தத்தம் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும், அன்னதான தொண்டினை நேரடியாகக் கண்டும், கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெறப் பணம், பொருள் முதலியவற்றை மனமுவந்து உதவி வரும் தருமசீலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையினரின் மனமுவர்ந்த பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### திருவிழா விபரம் 2025

| | | | |
|---|---|---|---|
| 26.06.2025 | ஆனி 12 | வியாழன் | கொடியேற்றம் |
| 05.07.2025 | ஆனி 21 | சனி | மஞ்சத் திருவிழா |
| 06.07.2025 | ஆனி 22 | ஞாயிறு | தண்டிகைத் திருவிழா |
| 08.07.2025 | ஆனி 24 | செவ்வாய் | சப்பறத்திருவிழா |
| 09.07.2025 | ஆனி 25 | புதன் | தேர்த்திருவிழா |
| 10.07.2025 | ஆனி 26 | வியாழன் | தீர்த்தத்திருவிழா |
| 11.07.2025 | ஆனி 27 | வெள்ளி | பூங்காவனத் திருவிழா |

நடைபெற இருப்பதால் அம்பாளைத் தரிசிக்கவரும் அடியார்களுக்குச் சிறந்த முறையில் பதினாறு (16) நாட்களும் இரவும், பகலும் அன்னதானம் வழங்கச் சபை தீர்மானம் செய்துள்ளது. ஆகவே தருமசீலர்களாகிய தங்களிடம் அன்னதான சபையால் நியமிக்கப்பட்ட தொண்டர்கள் வருவார்கள். அவர்களிடம் வழமைபோல் நீங்கள் உதவும் பணம், பொருள் முதலியவற்றைக் கொடுத்துச் சபையின் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

நேரடியாகப் பணம், பொருள் கொடுக்க விரும்பும் அடியார்கள் யாழ்.மார்க்கட் சிவகுமார் வெற்றிலைக் கடையிலும் திருநெல்வேலி மார்க்கட் தேனு களஞ்சியத்திலும் கொடுத்து அதற்குரிய பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாகப் பணம் கொடுக்க விரும்புவோர்
AMUTHASURBHI COMMERCIAL BANK
கணக்கு இல: 1247985000l Peoples Bank கட்டடம், Pettah
என்னும் விலாசத்திற்கு இலங்கை வங்கி Kayts
A/C NO: 7687836 என்னும் விலாசத்துக்கும் அனுப்புமாறு தாழ்மையுடன்
கேட்டுக்கொள்கின்றோம்

| | | |
|---|---|---|
| த.சிவானந்தன் - தலைவர்<br>ஸ்ரீ துர்க்கா என்ரபிறைசஸ்<br>133.5 ஆம் குறுக்குத்தெரு.<br>கொழும்பு -11.<br>தொலைபேசி -2384757 | இரா.கடம்பன்<br>செயலாளர் 2 ஆம்<br>வட்டாரம். நயினாதீவு<br>தொலைபேசி-<br>021 431 2149 | குமாரசாமி ஸ்ரீ காந்தராசா-<br>பொருளாளர். "மக்மிலன்"<br>புத்தகசாலை. 195, ஒல்கொட்<br>மாவத்தை, கொழும்பு -11.<br>தொலைபேசி [illegible] |

# துமிந்தவின் மறியல் நீடிப்பு

முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு ஹெவ்லொக் சிட்டி குடியிருப்பு வளாகத்தில் வசிக்கும் பெண்ணொருவ ரின் பயணப்பை யில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட தங்கமுலாம் பூசப் பட்ட துப்பாக்கி தொடர்பில், முன் னாள் அமைச்சர் துமிந்த திஸாநா யக்க பயங்கரவாத விசாரணைப் பிரி வினரால் கடந்த 23ஆம் திகதி கைதுசெய்யப்பட்டி ருந்தார். (ச-இ)


## காணி விற்பனைக்கு

உசன் கஜகேணி பிள்ளையார் கோவில் வீதி, தொந்தியா வேட்டையில் பயன்தரும் தென்னை மரங்களுடன் காணி விற்பனைக்கு உண்டு.

076 072 0341

(CR90660) J-1

## வேலையாள் தேவை

தோட்டவேலை செய்வதற்கு ஆள் தேவை. 45 - 50 வயதிற்குட்பட்டவர்கள் தங்கிநின்று வேலை செய்வதற்கு விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 077 977 3086

## வேலையாட்கள் தேவை

- மேசன் - Rs 3000.00
- வயறிங் - Rs 3000.00
- வெல்டர் - Rs 3000.00
- பெயின்ரர் - Rs 3000.00
- பிளமிங் - Rs 3000.00
- மேசன் உதவியாளர் - Rs 2500.00
- தச்சு வேலை (அனுபவமுள்ளவர்கள்) - Rs 3000.00

தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு :- 077 724 5399
(காலை 8.30 - மாலை 5.00 வரை)
யாழ்ப்பாணம்.

## நாகபூஷணி திருமண சேவை
## இடமாற்றம்

**359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**(துர்க்கா மணிமண்டபத்துக்கு அண்மையில்)**
**மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றி வைக்கப்படும்.**

077 138 7596, 071 999 9306

(CS/3325) (D) D'

## வேலைவாய்ப்பு

**கல்வி சார் ஊழியர்கள்**

எமது பாடசாலையில் பின்வரும் வேலைவாய்ப்பு காணப்படுவதால் தகுதியான பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்.

உங்கள் சுயவிபரக்கோவையையும், சான்றிதழ்களையும் **அதிபர், உடுவில் மகளிர் கல்லூரி, உடுவில்** என்ற முகவரிக்கு 13.06.2025 முன்னதாக அனுப்பிவைக்கவும்.

விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் 35 வயதிற்குட்பட்ட பெண் பட்டதாரிகள்.

1. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் - ICT English Medium
2. ஆரம்பப்பிரிவு - Primary 1-5
3. விஞ்ஞான ஆய்வுகூட பரிசோதகர் - (Lab assistant)

(CR 45292) E-1

**அதிபர்**

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**பெரியதம்பி பற்குணராஜா**
**(ஓய்வுபெற்ற காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன பாதுகாப்பு உத்தியோகத்தர்)**



காலங்கள் கடந்து
போனாலும்
நினைவுகள் நிழலாய்
தொடர்கின்றன
ஆண்டுகள் நான்கு
ஆனாலும்
ஆறாது எம் துயரம்.

தோற்றம் 30.12.1953
மறைவு 23.05.2021

**குடும்பத்தினர்**

(CS/30164) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாட்டை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குக

## ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

முல்லைத்தீவு, ஜூன் 7

**வடமாகாணத்தின் முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலும், கிழக்கு மாகாணத்திலும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் தீவிரம் பெற்றுள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்தி மீனவர்களைக் காப்பாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாம் காரியப்பர் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலான பிரேரணை ஒன்றை முன்மொழிந்தார். அதில் பங்கேற்று கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மீனவர்களின் வாழ்வாதாரங்கள் மற்றும், கடல்வளங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. சட்டவிரோதமான கடற்றொழில் செயற்பாடுகள் மிகத் தீவிரமாக முல்லைத்தீவு மாவட்டத்திலும் இடம்பெற்றுவருகின்றது.

முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினரும் தமது கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் செயல்கள் கடுமையாக இல்லை. கடற்றொழில் அமைச்சரும் இத்தகைய சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளுக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தும் இதுவரை நிலைமைகள் சீராகவில்லை. மீனவ மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். மீனவக் குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடு உட்பட தமது அன்றாட வாழ்வாதாரத்தைக் கொண்டுசெல்ல முடியாது திண்டாடுகின்றனர்.

ஆளணிப்பற்றாக்குறை தொடர்பாக எம்மிடம் கூறியிருக்கின்றார்கள். இது தொடர்பாக எழுத்துமூலமாகக் கடற்றொழில் அமைச்சரிடம் கையளித்துள்ளேன். ஆனால் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளுக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். சட்டவிரோதக் கடற்றொழில் செயற்பாட்டில் ஈடுபடும் திருட்டுக்கும்பல்களின் கொட்டத்தை அடக்கி, சட்டவிரோதிகளிடமிருந்து எமது மீனவமக்களைக் காப்பாற்றுங்கள் என்று கேட்கின்றோம்- என்றார். (ஏ-246)

# இந்திய மீனவர்களை சுட்டுப்பிடியுங்கள்

*மீனவ சங்கங்களின் சம்மேளனத் தலைவர் ஆவேசம்*

யாழ்ப்பாணம், ஜூன் 7

இந்திய மீனவர்கள் அத்துமீறி எல்லை தாண்டி எமது கடற்பரப்பினுள் நுழைந்தால் அவர்களை சுட்டுப்பிடிக்கவேண்டும் என்று யாழ்ப்பாணம் மீனவ சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் அ. மரியதாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 60 நாள்களும் எந்தவித பிரச்சினைகளும் இன்றி எமது வாழ்வாதாரமான கடற்றொழிலை நாங்கள் சிறப்பாக செய்து வந்தோம். வருமானமும் திருப்திகரமாக இருந்தது.

இந்திய மீனவர்கள் மீண்டும் 16ஆம் திகதி எமது கடற்பரப்புக்குள் வரப்போகின்றார்கள். அவர்களது அட்டூழியங்களால் இதுவரை காலமும் எமது யாழ்ப்பாண மீனவர்கள் பல்வேறு விதமான போராட்டங்களை முன்னெடுத்தும் எமது அரசாங்கத்தாலோ அல்லது இந்திய அரசாங்கத்தாலோ எந்த விதமான தீர்வுகளும் வழங்கப்படவில்லை. எனவே இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தமுடியாவிட்டால் சுட்டாவது அவர்களைப் பிடியுங்கள் எமது மீனவர்களையும் குடும்பங்களையும் காப்பாற்றுவதற்கு இதனைத்தவிர வேறு வழி இல்லை - என்றார். (ச-27)



முள்ளியவளை காட்டுவிநாயகர் சி.க. கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு சங்கக் கட்டத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. (ச-19)

# கிளி. மருத்துவமனைக்கு வடக்கு ஆளுநர் விஜயம்

கிளிநொச்சி, ஜூன் 7

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட பெண்கள் சுகாதாரப் பராமரிப்பு நிலையத்தை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று வெள்ளிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர், வடக்கு மாகாண ஆளுநரை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் தேவைகள் மற்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பெண்கள் சுகாதாரப் பராமரிப்பு நிலையத்தை இயக்குமாறு கோரியிருந்தனர்.

இதன் பின்னர் பெண்கள் சுகாதாரப் பராமரிப்பு நிலையத்திலுள்ள செயற்கை கருத்தரித்தல் நிலையத்தின் (ஐ.வி.எவ்.) செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடலும் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றபோது வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரும், ஆளுநரை மருத்துவமனையை வந்து நேரில் பார்வையிடுமாறு கோரிக்கை முன்வைத்திருந்தார். இந்தநிலையில் மாவட்ட மருத்துவமனைக்குச் சென்ற ஆளுநர், பார்வையிட்டதுடன் இதற்கான ஆளணி இன்னமும் அனுமதிக்கப்படாத நிலையில் அதனைப் பெற்று விரைவாக ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று குறிப்பிட்டார். (ச-27,113)





# 1250 கிலோ பீடி இலை நடுக்குடாவில் மீட்பு

## நால்வர் கைது

மன்னார், ஜூன் 7

மன்னார், நடுக்குடா கடற்கரைப் பகுதியில் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட ஆயிரத்து 250 கிலோ நிறையுடைய பீடி இலை மூடைகளுடன் கல்பிட்டியைச் சேர்ந்த 4 சந்தேகநபர்கள் நேற்று வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடற்படை மற்றும் மன்னார் மதுவரி நிலைய அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையில் சந்தேகத்துக்கிடமான இரு படகுகளைச் சோதனை செய்தபோது, 40 மூடைகளில் பொதி செய்யப்பட்ட நிலையில் 1250 கிலோ பீடி இலைகள் கண்டுபிடிக்கப்பட்டன. மீட்கப்பட்ட பீடி இலைகள், இரு படகுகள், வெளி இணைப்பு இயந்திரங்கள் போன்றவற்றுடன் 4 சந்தேகநபர்களையும் கடற்படையினர் மன்னார் மதுவரி நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர். (ச-25,56)

# தருமபுர பொலிஸ் நிலையத்துக்கு புதிய பொறுப்பதிகாரி நியமனம்



கிளிநொச்சி, ஜூன் 7

கிளிநொச்சி மாவட்டத்தில் தருமபுர பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக டி.என்.எஸ்.ஜே.திசாநாயக்க நேற்று வெள்ளிக்கிழமை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இவர் அநுராதபுரம் கலென்பிந்துனுவெவாப் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி தருமபுரம் பொலிஸ் நிலையத்தின் நான்காவது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார். (ச-41,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



கடந்த 09.05.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர்

## நல்லதம்பி தாமோதரம்பிள்ளை

(ஓய்வுநிலை அதிபர்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (08.06.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு நாம் துயருற்றிருந்த வேளையில் எமக்கு ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலிகள், பதாதைகள், இரங்கல் செய்தி வெளியிட்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோற்றம் 17.02.1939 | மறைவு 09.05.2025

பேராலை,
பளை.

குடும்பத்தினர்

(CS/58480) J-1

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## இ.தவநிரோஜன் (கஜி)

தோற்றம் 23.01.1988 | மறைவு 07.06.2015

ஆண்டுகள் பத்து கடந்ததையா
மீளவில்லை என் துயரம்
நீ சிரித்து வருகையிலே உள் புன்சிரிப்பைப்
பார்த்து மகிழ்ந்த குடும்பம் இன்று கலங்கி
நிற்குதையா மீளாதுயில் கொண்டுவிட்டாய்
எம் நெஞ்சங்கள் உன்னை மறக்கவில்லை
உன்னை நினைத்து நாங்கள்
கலங்கி நிற்கின்றோம்.

82/17, யாழ் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
தவம் தந்தை
பழைய பாட்ஸ கடை உரிமையாளர்.

(CS/58474) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 09 . 1938

மறைவு 04 . 06 . 2025

## அமரர் தம்பு செல்வரத்தினம்

மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு செல்வரத்தினம் அவர்கள் கடந்த (04.06.2025) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சின்னத்தம்பி தம்பு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் சிவயோகம், இராசம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான யோகம்மா, செல்லம்மா, பரமேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் அன்பு சகோதரியும், ரவீந்திரன், பேரின்பரதி, கெங்காலட்சுமி, ஆகியோரின் அன்பு தாயாரும் நாகநந்தினி, கிருஷ்ணன், அமலேஸ்வரன், ஆகியோரின் அன்பு மாமியாரும், ரிஷோகரன், பிரபாங்கனி, பிரசன்னா, டெல்ஷிகா, பிரணவன், ஆகியோரின் அன்பு பேர்த்தியும், வேதிகா, பிரீத்திகா, கார்மிகா, ஹனுக்ஷா, யஷ்மிகா, சகிர்தியா, சாதனா, யொகான், ஆகியேரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2025) ஞயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மட்டுவில் நெணியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்
077 357 3104

# மரண அறிவித்தல்



பிறப்பு 22 . 07 . 1942

இறப்பு 04 . 06 . 2025

## சின்னத்துரை செல்வரத்தினம்

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும் நாவற்குழி சித்தி விநாயகர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை செல்வரத்தினம் அவர்கள் கடந்த (04.06.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா - கனகம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற இந்திரபூபதியின் அன்புக்கணவரும் ஜெயகௌரி (சுவிஸ்), அகிலகௌரி, துவாரகி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவகுமாரன், (சுவிஸ்), சுகுமார் (நோர்வே), ரஜீகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தூயவன் (சுவிஸ்), விஷாலி (சுவிஸ்), அனுஜன், அனோஜா, றதுஷன் (லண்டன்), சந்தோன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் புஸ்பலீலாவதி, பஸ்பலீலாவதி (கனடா), கனகரத்னம் (கனடா), காலஞ்சென்ற குணரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு சகோதரனும் இரத்தினபூபதி, காலஞ்சென்ற கனகராஜா (கனடா), காலஞ்சென்ற இராசரத்தினம், நவமணி (கனடா), தியாகராஜா, புஸ்பராணி (கனடா) காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், சண்முகலிங்கம், இராமசாமி (கனடா) மற்றும் சுலோசனா தேவி (கனடா), மதனலோஜினி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவற்குழி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


சித்திவிநாயகர் கோவிலடி,
நாவற்குழி

தகவல் :
குடும்பத்தினர்

(CR 58493) E-1

# மரண அறிவித்தல்

## அமரர் வர்ணகுலசிங்கம் புஸ்பநாதன்



காரைநகரை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கந்தர்மடம், மணல்தறை வீதி, இலக்கம் 07 இனை வசிப்பிடமாகவும் கொண்ட வர்ணகுலசிங்கம் புஸ்பநாதன் அவர்கள் நேற்று (06-06-2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான வர்ணகுலசிங்கம் - நாகம்மா தம்பதியின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவரான சிவலிங்கம் - சத்தியலட்சுமி தம்பதிகளின் மருமகனும், சிவசாந்தி (ஓய்வுபெற்ற வேம்படி மகளீா் கல்லூரி ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், அவர்களின் பாசமிகு தகப்பனாரும், விஜய்குமார் (ஐக்கிய அமெரிக்கா) அவர்களின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், விஜயலட்சுமி மற்றும் பாக்கியலட்சுமி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சஞ்சயின் (ஐக்கிய அமெரிக்கா) பாசமிகு பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் (07-06-2025) இன்று சனிக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல் :
சிவசாந்தி புஸ்பநாதன் (மனைவி)
077 992 3518

இல.07, மணல்தறை வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

# மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 07 . 1929

மறைவு 05 . 06 . 2025

## சிவமலர் வேலாயுதபிள்ளை

(சிவமலர் ரீச்சர்)

உரும்பிராய் தெற்கு உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவமலர் வேலாயுதபிள்ளை அவர்கள் கடந்த (05.06.2025) வியாழக்கிழமை அன்று மண்ணுலகைத் துறந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - கனகம்மா தம்பதியின் மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம் தம்பதியின் மருமகளும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவஞானம் (முன்னாள் அரச அதிபர்), சுப்ரமணியம், செல்வரட்ணம், புஸ்பமலர் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, குலதேவி, சரோஜினி மற்றும் திரு. T.N பஞ்சாட்ச்சரம் (பிரபல ஆங்கில ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனியும், குகதாசன், சத்தியவாணி, தேவதாசன், சாந்தினி, Dr.சிவதாசன், குமரதாசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரட்ணகுமார், Dr. சித்ராஞ்ஜனி, ஈசன் கிருஷ்ணா, Dr. தயாளினி, ஹேமமாலினி, ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அரவிந், அகிலா, பிரணவன், தேவஷாயினி, தர்மதாசன், தர்மஷாயினி, கல்பனா, லக்ஷனா, ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மாறனின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் Dr. V. சிவதாசன்
[illegible]76.3379

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருள்மிகு சிவகாமி அம்மன் தேவஸ்தானம்

**வேலம்பிராய் கண்ணகி அம்பாள் ஆலய**
**விசாகப் பெரும் பொங்கல் உற்சவம் - 2025**

**கண்ணகி அம்பாள் அடியார்களே!**

தென்மராட்சிப் பதியில் கைதடி, கோயிலாக்கண்டி, வேலம்பிராய் அருள்மிகு கண்ணகி அம்பாள் ஆலய **விசாகப்பெரும் பொங்கல்** விழாவானது கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெற அம்பாள் அருள்பாலித்துள்ளார். இந் நிகழ்வானது நிகழும் மங்கலகரமான **விசுவாவசு வருடம் வைகாசி மீ 26-ம் உ (09-06-2025) திங்கட்கிழமை** மாலை வைகாசிப்பொங்கல் நடைபெற அம்பாளின் திருவருள் கைகூடியுள்ளது. காலை 9.00 மணிக்கு அம்பாளுக்கு அபிஷேகம், பூஜை நடைபெற்று வசந்த மண்டப பூஜையுடன் அம்பாள் உள்வீதியுலாவும் தொடர்ந்து மகேஸ்வரபூஜையும் இடம்பெறும்.

**கோயிலாக்கண்டி,**
**கைதடி.**

**இவ்வண்ணம்**
**ஆலய பரிபாலன சபை**

**University of Professional Studies**
**R.A.De Mel Mawatha**
**Colombo 03.**

**சட்டமாணி கற்கைகள்**

Department of Law :

இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையினால் சட்டத்துறை சார்ந்த பின்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கற்கை நெறிகள்: (பிரிவு: 3)**

Course 1: Diploma Courses
Course 2: Degree of Bachelor of Laws (LL.B)

இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகத்தினால் Diploma in Law கற்கைகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆறு மாத காலங்களினை கொண்டதாக Course 1 கற்கை நெறியும், மூன்று வருட காலங்களினை கொண்டதாக (விசேடம் : 4 வருடங்கள்) Course 2 கற்கை நெறியும் காணப்படுகின்றது.

**நன்மைகள்:**

- ❆ க.பொ.த (சா/த) பெறுபேறுகள் பெற்ற மாணவர்கள் கற்கைநெறியில் இணைந்துகொள்ள முடியும்.
- ❆ க.பொ.த (உ/த) பெறுபேறுகள் பெற்ற மாணவர்கள், உத்தியோகத்தர்கள் LL.B கற்கைகளி இணைந்து கொள்ள முடியும்.
- ❆ சட்டக் கல்லூரியின் Attorney- at-Law பதிவு, கற்கைகளினை பூரணப்படுத்த முடியும். ஆங்கி மொழி ஊடாக கற்றல், பரீட்சைகள்.
  விரிவுரைகள் சட்டத்தரணிகளினால் நேரடி, Zoom ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. தமிழ் மற்றும் ஆங்கில விரிவுரைகள்.
- ❆ இலகு தவணை கட்டண வசதி.
  பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரமுடையது.


**விண்ணப்பிக்கும் முறை :**

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை Whats app/மின்னஞ்சல் ஊடாக 22.06.2025 ற்கு முன்பாக அனுப்பி வைத்தல் வேண்டும் மேலதிக விபரங்களை இணையத்தளம் ஊடாக பார்வையிடலாம்.

**தெரிவு முறை: நுழைவுப் பரீட்சை/ நேர்முகப் பரீட்சை / பேரவையின் இறுதி முடிவு.**

மேலதிக விபரங்களிற்கு:
உதவிப் பதிவாளர்
இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகம்,
கொழும்பு 03.

Whats app: **0741127636**
Mobile: **0742349120/ 0775704893**
e-mail: degreeinfo21@gmail.com Web: www.upscampus.lk
Colombo/Batticalo/Trinco/Kandy/Vavuniya/Jaffna/Killinocchi/Mullitivu/ Mannar



பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அலகு, தொழிற்றுறைத் திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கான மாதாந்த விற்பனைச் சந்தை பிரதேச செயலக வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. (ச-25,9)

# தேசியமட்டக் கணித ஒலிம்பியாட் யாழ். மாணவன் தெரிவு

யாழ்., ஜூன் 7

பிரிவு1 மாணவர்களுக்கான மாகாணமட்டக் கணித ஒலிம்பியாட் போட்டிப் பரீட்சையில் யாழ்.மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்விகற்கும் மாணவரான சு.பார்கவின் இரண்டாமிடம் பெற்றுத் தேசியமட்டக் கணித ஒலிம்பியாட் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.



தேசியமட்டக் கணித ஒலிம்பியாட் பரீட்சை எதிர்வரும் 14ஆம் திகதி கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் இடம்பெறவுள்ள நிலையில் குறித்த போட்டியில் இம் மாணவன் பங்குபற்றவுள்ளார்.

(ச-41-66)

**பெண் வேலையாட்கள் தேவை**

ARUN WINGS Travels & Tours PVT,LTD
நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை
- ➤ Office Admin
- ➤ Air Ticketing Executive
(EPF,ETF)

T.P **0768472458**

**வேலைவாய்ப்பு**

**நிர்வாக அலுவலர் (பெண்)**
Walk-in-Interrview

**பிரபல நிறுவனம் ஒன்றிட்கு யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுவதற்கு நிர்வாக அலுவலர்கான (பெண்) விண்ணப்பம் கோரப்படுகின்றது.**

**விண்ணப்பதாரி**
- க.பொ.த (உ/த) தகைமை
- ஆங்கில, கணனி அறிவு
- வயது - 30 வயதிற்குள்

**நேர்முகப் பரீட்சை 07,08,/06/2025 காலை 09 மணியிலிருந்து நடைபெறும்.**

**சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**
- அடையாள அட்டை பிரதி
- பிறப்பு அத்தாட்சி பத்திர பிரதி
- கவர்ச்சிகரமான சம்பளம்.

**தொடர்புகளுக்கு :- 074 112 7636**



உடுவில் கந்தரோடை
**அருள்மிகு பெரியதம்பிரான் திருக்கோயில்**
**வருடாந்த வைகாசிப் பெரும்பொங்கல் - 2025**

| சாடிமனைப் பொங்கல் | பெரும் பொங்கல் |
|---|---|
| 07.06.2025 | 08.06.2025 |
| சனிக்கிழமை | ஞாயிற்றுக்கிழமை |

பெரும் பொங்கல் பிரதம பூசகர்
சிவத்திரு. அப்புத்துரை சிறிசங்கர் ஐயா
(மல்லாகம் பெரிய தம்பிரான் ஆலய பூசகர்)

**தீ-மிதிப்பு**
08.06.2025
ஞாயிற்றுக்கிழமை
மதியம் 12.00 மணிக்கு

(CS/58485) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவைக்கு...

அனுதாபப் பிரேரணை அமைந்துள்ளது. ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த அனுதாபப் பிரேரணை தொடர்பில் மீது உரையாற்றினார்கள். (அ-ம-இ)

## சித்துப்பாத்தி...

மனிதப் புதைகுழியாக அறிவிக்கக் கோரிய வழக்கு, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி அ.அ.ஆனந்தராஜாவின் முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, குறித்த குற்றப் பகுதியை ஒரு மனிதப் புதைகுழி என்று நீதிபதி ஆனந்தராஜா அறிவித்தார்.

இந்த விடயத்தில் கடமையாற்றிவரும் சட்டமருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், தொல்பொருள் தடயவியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா ஆகியோரின் அபிப்பிராய அறிக்கை நேற்று மன்றில் முன்வைக்கப்பட்டது. அந்த அறிக்கைகளில்

✦ குழப்பமான சூழமைவில் பல மனித எச்சங்கள் காணப்படுகின்றன.

✦ குற்றப் பகுதியில் இருந்து ஆடைகளோ அல்லது ஆபரணங்களோ மீட்கப்படவில்லை.

✦ இதுவரை 17 என்புத்தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. இன்னும் பல என்புத்தொகுதிகள் இருக்கலாம்.

✦ வெறும் 1.6 மீற்றர் அளவிலேயே மனித என்புச் சிதிலங்களை மீட்கக்கூடியதாக உள்ளது.

✦ குவியல் குவியலாக என்புச் சிதிலங்கள் உள்ளன.

✦ இன்னும் பல என்புச் சிதிலங்கள் புதையுண்டிருக்கலாம்.

✦ குற்றப் பகுதியை தொடர்ச்சியாக ஆய்வு செய்யவேண்டிய கட்டாயத்தேவை உள்ளது - என்ற விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

இவற்றின் அடிப்படையிலேயே, சித்துப்பாத்தி குற்றப் பகுதியை 'புதைகுழியாக' நீதவான் அறிவித்ததுடன், 45 நாள்கள் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளவேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். (அ-ம-125-26)

## மாதகல்...

மாதகல் பகுதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை உலகேந்திரராசா (வயது-56) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

பண்டத்தரிப்பு கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றும் இவர், சங்கானைப் பகுதிக்கு பிறிதொருவருடன் மோட்டார்சைக்கிளில் சென்றுவிட்டுத் திரும்பும்போதே, சங்கானை யூனியனுக்கு அருகாமையாக உள்ள வளைவில் பட்டா ரக வாகனத்துடன் விபத்து ஏற்பட்டுள்ளது. இதன்போதே, குறித்த நபர் உயிரிழந்ததுடன், மற்றையவர் படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பட்டாவின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-125-26)

## 323...

இருந்தனவா? என்ற தெளிவுபடுத்தலை அரசாங்கம் வழங்கவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக மேலும் தெரிவித்ததாவது:-

சிவப்பு 'லேபல்' ஒட்டப்பட்டிருந்த 323 கொள்கலன்கள் துறைமுகத்திலிருந்து ஆய்வின்றி விடுவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஆயுதங்கள் இருந்தனவா? போதைப்பொருள்கள் இருந்தனவா? என்பன தொடர்பில் சுங்க அதிகாரிகளே சந்தேகம் எழுப்பியுள்ளனர். ஜனாதிபதி தேர்தலின்போது அநுர குமார திஸாநாயக்கவுக்கு ஆதரவாக செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, 'தாய்லாந்தில் இருந்து பிரபாகரனின் ஆயுதங்களே அந்தக் கொள்கலன்களில் வந்துள்ளன' எனக் கூறியுள்ளார். அதிகாரிகளின் கூற்றும், அவரின் கூற்றும் பொருந்துகின்றன.

கொள்கலன்கள் தொடர்பில் நாம் முறையிட்டோம். விசாரணை கோரினோம். எனினும், கொள்கலன்களில் என்ன வந்தது என்பதை அரசாங்கம் ஏன் ஒளிக்கின்றது?. குறித்த கொள்கலன்களில் இருந்தவை எவை? என்பது பற்றி அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும். ஏன் இவ்வளவு காலம் மறைக்கப்படுகின்றது? என்பது பற்றியும் விளக்கம் தேவை - என்றார். (அ-ம-44)

## கழிவு...

வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. பசளையாக்கல் நிலையமாகத் திறக்கப்பட்டு பின்னர் திண்மக்கழிவு தரம் பிரித்தல் நிலையமாக செயற்பட்டு தற்போது திண்மக்கழிவுகளை சேகரிக்கும் நிலையமாகச் செயற்பட்டு வரும் பகுதியிலேயே இந்தத் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

தீவிபத்துக் காரணமாக, அந்தப் பகுதி மக்கள் கண்ணெரிவு மற்றும் சுவாசப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ளனர். இன்னும் சிலர், தங்களின் உறவினர்களின் வீடுகளுக்கு தற்காலிகமாக இடம்பெயர்ந்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

காரைக்கால் கழிவு சேகரிப்பு நிலையத்தில் இடையிடையே இவ்வாறான தீவிபத்துகள் தொடர்ச்சியாக ஏற்படுகின்றன. எனவே, இதுவொரு திட்டமிட்ட செயலாக இருக்கலாம் என்றும் பொதுமக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், காரைக்கால் இந்து மயானத்துக்குள் அண்மைக்காலமாக நல்லூர் பிரதேசசபையால் குப்பைகள் கொட்டப்பட்டு தீவைக்கப்படுகின்றது என்றும் தாம் அதை அவதானித்துள்ளதாகவும் பொதுமக்கள் ஊடகங்களிடம் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

தேசிய சுற்றாடல் வாரம் கடைப்பிடிக்கப்பட்டுவரும் நிலையில், பிளாஸ்ரிக் உள்ளிட்ட பொருள்களை தொன் [illegible] கொண்டுள்ள குப்பைக் கிடங்குகளில் ஏற்பட்டுள்ள இந்தத் தீவிபத்து ஆர்வலர்களிடையே பெரும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச செயலரைத் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

குப்பைக்கிடங்கில் தீ பரவியதைத் தொடர்ந்து, குப்பைக்கிடங்கின் பின்பக்கமாக உள்ள பகுதியால் விஷமிகள் சிலர் தப்பிச் செல்வதை எமது காவலாளி அவதானித்துள்ளார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-125)

## சேவை...

தீயைக் கட்டுப்படுத்துவதற்கு, கரைச்சி பிரதேசசபைத் தீயணைப்புத் துறையின் உதவியைப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் தீயணைப்பு வாகனம் முழுமையான சேவையை வழங்கமுடியாத நிலையில் உள்ளதைத் தொடர்ந்தே கரைச்சிப் பிரதேசசபையின் உதவி கோரப்பட்டு, நேற்று இரவு அங்கிருந்து வாகனம் அனுப்பிவைக்கப்பட்டு, தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (அ-ம-125)

## சித்துப்பாத்தி மயானசபை...

குறிப்பாக, இரவு வேளைகளில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவதில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில், செம்மணி சித்துப்பாத்தி மயானம் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு சித்துப்பாத்தி மயானசபை உறுப்பினர்களும் உதவிக்கு வரவேண்டும் என்ற கோரிக்கையை பொலிஸார் முன்வைத்துள்ளனர். (அ-ம-125-26)

## செம்மணி மனிதப்...

நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, செம்மணிப் புதைகுழியைப் பார்வையிடுவதற்கு எவரும் விண்ணப்பிக்கமுடியும் என்று கூறியுள்ளார்.

நீதிபதி அ.அ.ஆனந்தராஜா மேலும் தெரிவித்தாவது:-

செம்மணிப் புதைகுழியில் அகழ்வுப் பணிகள் இடம்பெறும் இடங்களை எவராவது பார்வையிடுவதற்கு விரும்பினால் தகுந்த விதத்தில் நீதிமன்றத்தை அணுகி விண்ணப்பிக்கவேண்டும். அவர்களின் கோரிக்கையில் நீதிமன்றம் திருப்தியடையுமாக இருந்தால், அதற்கான அனுமதி வழங்கப்படும் - என்றார். (அ-ம-125-26)

## செம்மணிப்...

ளது. செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற குற்றப் பிரதேசத்தை, 'மனிதப் புதைகுழி' என்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் அறிவித்துள்ளது. இதையடுத்து இன்றுடன் அகழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டு, 45 நாள்கள் அகழ்வுகளை மேற்கொள்ளும் வகையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-ம-26-125)

## செம்மணி...

2011ஆம் ஆண்டளவில் குறித்த பகுதிகளில் பதிவுசெய்யப்பட்ட செய்மதி ஒளிப்படங்களை வைத்தே இந்தத் தகவலை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

அகழ்வு நடைபெற்றுவரும் சித்துப்பாத்தி மயானத்தின் மனிதப் புதைகுழியின் தரைத்தோற்றம், செறிவு, முகத்தோற்ற மாதிரிகளுக்கு ஒப்பான பிறிதொரு இடம் சித்துப்பாத்தி மயானத்துக்கு அருகாகக் காணப்படுகின்றது. எனவே, அதுவும் மனிதப் புதைகுழியாக இருக்கலாம் என்றும், அங்கும் ஆய்வுப் பணிகளை முன்னெடுக்கவேண்டும் என்றும் பேராசிரியர் சோமதேவ குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் நீதிமன்றத்தின் கவனத்துக்கும் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில், நீதிமன்றம் தீர்மானிக்கும் திகதியில் இருந்து 45 நாள்கள் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் பேராசிரியர் சோமதேவ குறிப்பிடும் இரண்டாவது பகுதியிலும் அகழ்வுப் பணிகள் அல்லது அகழ்வுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-26-125)

## விபத்தில்...

இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கேரத் பண்டார (வயது-38) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

அனிச்சங்குளம் பகுதியில் கடந்த 23ஆம் திகதி துவிச்சக்கர வண்டியில் சென்றபோது அவரை மோட்டார்சைக்கிளொன்று மோதித் தள்ளியுள்ளது.

இதையடுத்து படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மேலதிக சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கோவலனார் கதை' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 7

தமிழ்ப்பற்றாளர் வழக்கறிஞர் செ.சிறீக்கந்தராசாவின் வட ஈழ ஆதி காவியம் "கோவலனார் கதை" நூல் வெளியீடு, பேராசான் மு. நித்யானந்தன் தலைமையில் நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

திருமதி. மாதினி சிறீக்கந்தராசாவின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகவிருக்கும் விழாவில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, பேராசிரியர் ம.இரகுநாதன், பேராசிரியர் க. இரகுபரன், கவிஞர் சோ.பத்மநாதன், கலாநிதி செல்லத்துரை சுதர்சன் ஆகியோர் உரைகள் நிகழ்த்தவுள்ளனர். பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் சி.சற்குணராஜா, சிறப்பு அதிதியாக பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தமிழகத்தின் செம்மொழி ஆய்வு நிறுவனத்திற்காக பதிற்றுப்பத்து, கலித்துறை ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும், இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆக்கியும் சிறந்த தமிழ் பணியாற்றி வரும் வழக்கறிஞர் செ.சிறீக்கந்தராசா "கோவலனார் கதை" என்ற கோயில் சுவடியை எழுதிப் பதிப்பித்து வெளியிடுவது பாராட்டுதற்குரியது. (ச-25,66)

## கோழி வளர்ப்போருக்கு

இத்தாலியில் (Italy) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கோழி குஞ்சு பொரிக்கும் இயந்திரம் (Egg Incubator)

ஒரே நேரத்தில் 49 கோழி முட்டைகளை அடைகாக்கும் அரை தானியங்கி இயந்திரம் இப்பொழுது எம்மிடம். அத்துடன் விரும்பிய பறவைகளின் முட்டைகளையும் பயன்படுத்தலாம். இது ஒரு இத்தாலி (Italy) நாட்டின் தயாரிப்பு

"நாங்கள் உங்களோடு"



ஆர்க் .என். கம்பனி

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803

**IELTS** - 07.06.2025 - 10.30 am New Batch

(Academic - General and Life Skill A1)

இத்துடன் Basic & Advance English Grammar Classes

இல. 53, சிவகுருநாதர் வீதி Brown Rd, Jaffna.

By : B.MURALI - 077 798 9830

## காணி வீடு விற்பனைக்குண்டு

யாழ் அளவெட்டி பெரிய சங்கத்தானை சந்தியில் இருந்து 100m தூரத்திலும் A.M.A கல்வி நிலையத்தில் இருந்து 50m தூரத்திலும் நல்ல நீர்க்கிணறு, வருமானங்களும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. குடியிருப்புச் சூழல்.

காணியின் பரப்பு - 5 பரப்பு

தொடர்பு: 076 755 8606
076 798 1092

(CS 58478) E-1

## காணி விற்பனைக்கு

ஆஸ்பத்திரி வீதி, சுப்பிரமணியம் வீதியில் 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொர்புகளுக்கு:- 076 413 4766

## Land and House for Sale Point-Pedro, Sri Lanka

A prime 3-parapu beach road property (approximately 30 perches) located at the intersection of Beach Road and First Cross Street in downtown Point Pedro is available for quick sale. The asking price is 350 lakhs SL Rupees (CAD 160,000). For further info and contacts:

077 622 5033 / 077 714 8034

## காணி வீடு விற்பனை


பருத்தித்துறை கடற்கரை வீதியில் அமைந்துள்ள (கடற்கரை வீதி + முதலாம் குறுக்கு தெரு சந்தி) 3 பரப்பு காணி + வீடு விற்பனைக்கு உள்ளது. கேள்வி விலை 3.5 கோடி ரூபா (CAD 160,000).

Email : Pointpedroproperty@gmail.com

077 622 5033 / 077 714 8034

## மரண அறிவித்தல்

மலர்வு 05 . 03 . 1942



மறைவு 04 . 06 . 2025

### அமரர் சுப்பிரமணியம் புலேந்திரலிங்கம் (காட்டர்)

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் ஓய்வு பெற்ற கிளைமுகாமையாளர், இயக்குனர் சபை உறுப்பினர்

மடத்தடி வீதி சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் புலேந்திரலிங்கம் (காட்டர்) அவர்கள் 04.06.2025 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சின்னத்தங்கம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற யோகலிங்கம் அவர்களின் அன்புச் சகோதரனும், விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற சின்னத்தம்பி யோகம்மா, சின்னையா, கணேசு, சறோஜினி தேவி, இரத்தினம், புவனேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நவநந்தினி (நோர்வே) சதானந்தன், சத்தியானந்தன் (ஜேர்மனி), சர்வானந்தன் (ஐக்கிய இராச்சியம்), குகானந்தன் (ஆசிரியர், யா/இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவகுமார் (நோர்வே), சுகந்தினி (ஜேர்மனி), பூங்கோதை (ஜேர்மனி), கிருத்திகா (ஐக்கிய இராச்சியம்), அனுஷா (ஆசிரியை, யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அகிந், ஆகாஷ், சமேரா, காரணிகா, ஜாதுரன், டமீத்தா, பூமித்தா, சனத்தா, அஸ்வின், அனீஸ், அனிக்கா, ஐஸ்மிதன், லக்சுதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (08/06/2025) ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மடத்தடி வீதி
சாவகச்சேரி

(CR 45295) E-1

தகவல்: குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு : 077 728 6031

## மரண அறிவித்தல்

மலர்வு 20 . 12 . 1939



உதிர்வு 02 . 06 . 2025

### திருமதி ஞானேஸ்வரி கணேசலிங்கம்

யாழ்ப்பாணம் வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வேலணை கிழக்கு மணியக்காரன் இடத்தைப் புகுந்த வீடாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி கணேசலிங்கம் அவர்கள் கடந்த (02.06.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், சரவணமுத்து கணேசலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசரெத்தினம், இரத்தினசபாபதி, இலட்சுமிப்பிள்ளை, கனகரெத்தினம், பூமளம் (நீலா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேஸ்வரி (புஸ்பா), காலஞ்சென்ற கமலேஸ்வரி (கமலா), குகதாசன், விமலேஸ்வரி (ஆசிரியை கொ/அல் நாஸர் கல்லூரி, கொழும்பு), கோணேஸ்வரன், விக்கினேஸ்வரன், ஐங்கரன், ஆனந்தி, ரஜேந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணேசரட்ணம், இராசமலர், விஜயநாதன், அனுசியா, சர்மிளா (ஆசிரியை கைதடி குருசாமி வித்தியாலயம்), சுகந்தி, தரணீதரன், வரதகயன் ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுஷா, திவ்யா, அனுஷா, சபிதா, சுஞ்சஜன், சஜீவன், நிவிதா, கேசவன், வைகன், அக்சயன், அபர்ணா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், இஷா, இனியா ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, பரமேஸ்வரி, சிவப்பிரகாசம் மற்றும் வசந்தாதேவி, அம்பிகாபதி , காலஞ்சென்ற சொர்ணம்மா மற்றும் சிதம்பரநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2025) ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் வீதி, கைதடி மேற்கு, கைதடியில் அன்னாரின் மகனின் இல்லத்தில் காலை 8.30 மணியளவில் நடைபெற்று முற்பகல் 10.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேலணை மேற்கு அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கோப்பாய் வீதி,
கைதடி மேற்கு, கைதடி,
யாழ்ப்பாணம்.

(CS/3333) J-1

தகவல் : குடும்பத்தினர்
077 902 1096

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... உள்ள அவர்களது பணிமனையில் 07.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org